சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 25.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 3/2026 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | மணிகண்டன் |
| தந்தை பெயர் | : | பன்னீர்செல்வம் |
| கிராமம் | : | குத்தாலம் |
| தாலுக்கா | : | குத்தாலம் |
| தொழில் | : | காவல்துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 40 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்பொழுது திருவாரூர் மாவட்ட திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக 19.01.2024-ம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.09.2025 ஆம் தேதி திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளர் சத்தியா என்பவர் பணியிலிருந்தபோது அ.சா-1 புவனேஷ்வரி என்பவர்

நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்றுள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரின் அடிப்படையில் ஆய்வாளர் சத்தியா நிலைய குற்ற எண்.35/2025-ல், பா.நி.ச பிரிவுகள் 296(b), 318(2), 69, 351(3) உ/இ 3(1)(w)(i), 3(1)(s), 3(2)(va) SC/ST (PoA) Act கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கு பட்டியல் சமூகத்தினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திருவாரூர் உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த என்னை புலன் விசாரணை செய்ய வேண்டுமென காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக நடவடிக்கை C.No.191/SJ&HR/TVR/2025, Dated: 27.09.2025-ன் கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. இதனை தொடர்ந்து இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே 15.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் பிரபு மற்றும் பிரபாகரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் ஒன்றும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். பார்வை மகஜரில் உடனிருந்த சாட்சியிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-5** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே அ.சா-1 புவனேஷ்வரி, அ.சா-2 மாதவன், சாட்சிகள் சுமித்ரா, பிரித்திவிராஜ், சுரேஷ், வசந்த், ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

3. பின்னர் அன்றைய தினமே மாலை 17.00 மணிக்கு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் திருவாரூர் வாளவாய்கால் பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி மனோகரன் என்பவரை காரணம் கூறி கைது செய்தேன். நிலையம் அழைத்து வந்து எதிரியிடம் ஒரு வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்னர் தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

4. பின்னர் கடந்த 28.09.2025 ஆம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட புவனேஷ்வரி என்பவரை WHC 219 தலைமைக்காவலர் கௌசல்யா என்பவருடன் காவல் நிலைய நமூனா மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனை செய்ய அனுப்பி வைத்தேன். திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவர் திவ்யா என்பவரிடம் ஆஜர் செய்து விபத்து பதிவேடு பதிவு செய்து மருத்துவ பரிசோதனை முடித்து விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ சான்று பெற்றேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-7** ஆகவும் மற்றும் மருத்துவ சான்று **அ.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் அன்றைய தினமே சம்பவ சாட்சிகளான கல்பனா மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் கடந்த 29.09.2025 ஆம் தேதி இவ்வழக்கின் பாதிக்கபட்ட அ.சா-1 புவனேஷ்வரி என்பவருக்கு ரகசிய வாக்குமூலம் பெறவேண்டி 183(5) BNSS-ல் கீழ் WHC 609 தலைமைக்காவலர் வாசுகி என்பவரிடம் கூடுதல் மகிளா நீதிமன்றம் அவர்களிடம் ஆஜர் படுத்த ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்து மேற்கண்ட தலைமைக்காவலர் WHC 609 வாசுகி என்பவர் மூலம் கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நீதிபதி முன்பாக 183(5) BNSS ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பின்னர், கடந்த 09.10.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு செங்கல்பட்டு மாவட்டம், கூடலூர், மறைமலைநகர் அருகில் உள்ள GDH லாட்ஞ் சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் பர்வின்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் மற்றொரு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் ஒன்றும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். பார்வை மகஜரில் உடனிருந்த

சாட்சியிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-10** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகள் ஆகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே மேற்கண்ட GDH லாட்ஞ் ன் மேலாளர் பிரமோத் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், 10.10.2025-ம் தேதி நீதிமன்ற காவலில் இருந்த இவ்வழக்கின் எதிரி மனோகர் என்பவரை போலிஸ் காவலில் எடுத்து தலைமைக்காவலர் HC 468 கோபிபிரசாத் மற்றும் PC 519 ஜாஸ்மின் ஆகியோர்கள் மூலம் மருத்துவ பரிசோதனைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர், எதிரியை மருத்துவ பரிசோதனை செய்து அதன்பேரில் எதிரி உடலுறவு கொள்ள தகுதியானவர் என்பதற்கான சான்றை வழங்கிய மருத்துவர் ஹரிபிரசாத் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம்பதிவு செய்தேன். அந்த மருத்துவசான்று **அ.சா.ஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பின்னர், இவ்வழக்கின் எதிரிக்கும், அ.சா.1-க்கும் சாதி சான்றிதழ் வழங்க கோரி திருவாரூர் வாட்டாட்சியர் அலுவலகத்தில் வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். அந்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் வட்டாட்சியர் ஸ்டாலின் என்பவர் எதிரியானர் இந்து அம்பலக்காரர் என்பதற்கான சாதி சான்றிதழ் வழங்கினார். அந்த சாதிசான்றிதழ் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.1 ஆனவர் இந்து பறையன் வகுப்பை சார்ந்தவர் என்று சாதி சான்றிதழ் வழங்கினார். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிக்கும், அ.சா.1-க்கும் சாதி சான்றிதழ்களை பெற்றும் சாதி சான்றிதழ்களை வழங்கிய விசாரணை செய்து 14.10.2025-ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்தேன்.

8. பின்னர், இவ்வழக்கின் புகார்தாரரிடம் புகார் பெற்று முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.

சத்தியா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், 15.11.2025-ம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட புவனேஸ்வரியின் தந்தை மாதவன் தாமாக முன்வந்து புகார்தாரர் மற்றும் எதிரி இணக்கமாக இருந்த கலர் புகைப்படம் ஒன்றும், சா.பொ.1 ஆன Jio Sim கொண்ட Vivo செல்போன் ஒன்று மற்றும் கருப்பு மற்றும் சிவப்பு கலர் கொண்ட Sandisk என்று எழுதப்பட்ட 16 GB கொண்ட Pendrive ஒன்றை எனது புலன் விசாரணைக்கு சமர்ப்பித்தார். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன Pendrive **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவைகளை நான் படிவம் எண்.91-ன் மூலம் நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் எண்.91 **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. அன்றைய தினமே புகார்தாரரின் தந்தையான அ.சா.2 மாதவன் என்பவரை விசாரணை செய்து மறு வாக்கு மூலம்பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையில் சம்பவ சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், மருத்துவ சான்றிதழ்களிலிருந்தும், சாதி சான்றிதழ்களிலிருந்தும் மற்றும் எனது விசாரணையில் சமர்ப்பித்த செல்போன் மற்றும் Sandisk ல் உள்ள பதிவுகளிலிருந்தும் எதிரியின் மீது மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் 26.11.2025-ம் தேதி இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். இவ்வழக்கின் அ.சா.1 புவனேஸ்வரி எனது விசாரணையில் புகாரில் சொல்லப்பட்டுள்ள சம்பவம் உண்மை என வாக்குமூலம் அளித்தார் அதனை நான் பதிவு செய்துள்ளேன். நீதிமன்றத்தில் அவர்களிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் தவறு. நீதித்துறை நடுவர் அவர்களால் வாக்குமூலம் எவ்வாறு அளிக்கவேண்டுமென்று போலிசார் சொல்லிக்கொடுத்ததாக அ.சா.1 நீதிமன்றத்தில் சாட்சியத்தில் கூறியுள்ளார் அது தவறு. அ.சா.2 எனது விசாரணையில், புகாரில் சொல்லியுள்ள விபரங்களை வாக்குமூலமாக சொன்னார். மேலும், சான்று பொருட்களை என்னிடம் ஒப்படைக்கும் போது அவர் கூறியுள்ள சங்கதிகளை வாக்குமூலங்களாக பதிவு

செய்துள்ளேன். அ.சா.2 நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது எனது விசாரணையில் சம்பவத்தை பற்றி எதுவும் கூறவில்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா.ஆ.2 ஆன புகாரில் அ.சா.1 ஆனவர் இந்த எதிரி 2021-ம் ஆண்டு முதல் தன்னை காதலித்து வந்ததாக கூறியுள்ளார் என்று சொன்னால் ஆமாம். நான்கு ஆண்டுகள் கழித்து தான் முதன்முதலாக புகார் காவல் நிலையத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும், அ.சா.1-க்கும் திருமணம் நடைபெற்றுவிட்டது என்று சொன்னால் நான் இறுதி அறிக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்யும் வரை அ.சா.1-க்கும், எதிரிக்கும் திருமணமாகவில்லை. நான் கைப்பேசி மூலமாகவும், மின்னனு சாதனம் மூலமாகவும் எதிரியும், புகார்தாரரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்ட விபரமும், புகார்தாரரை அறுவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியும், மிரட்டியும் சாதியை சொல்லி பேசியதாகவும் சொல்லப்படும் பதிவுகளை சைபர் கிரைம் காவல் தடய அறிவியல் துறைக்கு அனுப்பி பதிவுகளின் விபரங்களை அறிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான் தவறான பதிவுகளின் அடிப்படையில் இந்த எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எவ்வித தடயப்பொருட்களையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரியும், அ.சா.1-ம் தங்கியிருந்த விடுதியில் அவர்கள் தங்கியிருந்த அறையின் எந்த தடய பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அ.சா.1-ம், எதிரியும் காதலித்து வந்தார்கள் என்றும் இந்நிலையில் எதிரி அ.சா.1-ஐ வீட்டிற்கு தெரியாமல் திருமணம் செய்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டதன்அடிப்படையில் எதிரியும், அ.சா.1-ம் திருமணம் செய்துகொள்ள தயாராக இருந்தார் என்றும் இந்த விபரம் அ.சா.1-ன் பெற்றோருக்கு தெரிந்ததன் காரணமாக அ.சா.1-ன் பெற்றோர் அ.சா.1-ஐ கண்டித்ததாகவும், பின்னர் ஊரில் உள்ளவர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக அ.சா.1-ன் தகப்பனாரான அ.சா.2, அ.சா.1-ஐ அழைத்துக்கொண்டு காவல் நிலையம் வந்துள்ளார் என்று சொன்னால் தவறு. அ.சா.1 உடன்

வந்திருந்த உறவினர்களில் ஒருவர் எழுதிக்கொடுத்த புகாரை தவறாக பதிவு செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.24 18:04:21 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.